MISSOURI TAMIL SCHOOL
மிசௌரி தமிழ்ப்பள்ளி

Non-Profit organization
Registered in state of Missouri

AdvancED ACCREDITED

# அரும்பு

சித்திரை, திருவள்ளுவராண்டு 2051 JUNE 2020, இதழ் 11



# Arumbu Magazine from Tamil School of Missouri



# தமிழ்த்தாய் வாழ்த்து

**நீராருங் கடல் உடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்**
**சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்**
**தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்**
**தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!**
**அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற**
**எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!**
**உன் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!**
**வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!**

- மனோன்மணீயம் பெ. சுந்தரனார்

# ஆசிரியர் உரை

## வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

பழமையான தமிழையும் தொன்மையான பண்பாட்டு கூறுகளையும் அதி நவீன வாழ்க்கை முறையுடன் இணைத்துப் பேணுவது தமிழரின் பெருமை. அயல் நாட்டில் வாழ்ந்தாலும் ஒத்த நோக்குடைய தமிழர்களோடு இணைவதால் இது சாத்தியமாகிறது. இதற்கு வழிவகுக்கும் வகையில் ஆண்டுதோறும் பல நிகழ்வுகளை மிசௌரி தமிழ்ப் பள்ளி நடத்தி வருகிறது. அதின் ஒரு அம்சம் தான் அரும்பு இதழ்வெளியீடு.

இயற்கையோடு இணைந்த வாழ்வும், இயற்கையை வணங்கும் மாண்பும் தமிழரின் பண்பாட்டு கூறுகள். அத்தகைய இயற்கையை தங்கள் எழிலோவியங்களால் நம் கண் முன்னே கொண்டு வந்து, இவ்விதழை வண்ணமயமாக்கி உள்ளனர் நம் மழலை மற்றும் நிலை 1 மாணவர்கள். மேலும், நிலை 2 மற்றும் நிலை 3 மாணவர்கள் தங்கள் மனம் கவர்ந்த பருவநிலையை அவர்கள் கைவண்ணத்தில் சித்திரமாகத் தீட்டி இவ்விதழுக்கு மேலும் மெருகேற்றியுள்ளனர்.

உலகின் அனைத்து உயிர்களையும் இணைத்துக் காக்கின்ற அன்பின் மகத்துவம் பற்றிய தங்களின் கருத்துக்களை எழுத்துக்களால் வெளிப்படுத்தியுள்ளனர் நிலை 4 மாணவர்கள். தங்கள் வாழ்வில் நினைவில் நின்ற பயணத்தைப் பற்றி எடுத்தியம்பி மலரும் நினைவுகளில் மனம் மகிழ்ந்துள்ளனர் நிலை 5 மற்றும் நிலை 6 மாணவர்கள். நிலை 7 மற்றும் நிலை 8 மாணவர்களோ தங்கள் படைப்பாற்றலை தாய்மொழி அறிவுடன் இணைத்து சிறுகதைகளாகவும், கட்டுரைகளாகவும் வடித்துள்ளனர். இந்த இதழுக்கு மேலும் மெருகு சேர்க்கும் வண்ணம் தமிழ்ப்பள்ளி பெற்றோர்கள் மற்றும் தன்னார்வலர்கள் வரைந்துள்ள இலக்கிய படைப்புகளுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது இளைய தலைமுறை, பூமியின் தற்போதைய நிலைமையை அறிந்து, வேற்று கிரகங்களில் வாழ ஒரு வழியை கண்டறிய முற்படுவது போல் இவ்விதழின் அட்டை படத்தை வரைந்துள்ளார் மாணவர் ஆதிசரண் ஸ்ரீதர். அவரது கற்பனைத்திறனைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அரும்பு இதழை சிறப்பாக வடிவமைத்துள்ள திரு. சுடலை அவர்களுக்கும், இவ்விதழை வெளியிட எங்களுக்கு உறுதுணையாக இருந்த மிசௌரி தமிழ்ப் பள்ளிக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

பழமையும் இனிமையும் கொண்டிருக்கும் தமிழை நாளும் கற்றும் கற்பித்தும் பார் போற்றும் இனமாக திகழ்வோம் என்பதற்கு சான்றாக வெளிவந்திருக்கும் இந்த அரும்பு மலர் வெளியீட்டைப் படித்து மகிழுங்கள். அழகான அரும்பு மலருக்கு ஆசிரியர் உரை எழுத வாய்ப்பளித்தற்கு நன்றி பாராட்டிக் கொண்டு தங்களிடமிருந்து விடைபெறுகின்றோம்.

தாய் வாழ்க! தாய் தந்த தமிழ் வாழ்க!

## அரும்பு இதழ் ஆசிரியர்கள்


ரம்யா ஜானகிராம்


அன்னபூரணி கண்ணன்


சுபாராஜேஸ்வரி ஜெய்கணேஷ்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பள்ளி நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் | - | 5 |
| இயற்கை | - | 12 |
| காலங்கள் | - | 16 |
| அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? | - | 20 |
| மனதில் நிற்கும் பயணம் | - | 22 |
| வெற்றி நிச்சயம் | - | 23 |
| வீட்டுப்பாடம் | - | 24 |
| அனிதாவும் அக்குராவும் | - | 25 |
| சிறுத்தைப்புலியை அடக்குவது எப்படி | - | 26 |
| துள்ளி வரும் காற்றே | - | 27 |
| நீர்க்குமிழி உதித்து மறைந்தது | - | 27 |
| ஆட்டோகிராப் | - | 28 |
| ஏக்கம் | - | 28 |
| கை சொல்லும் காதை | - | 29 |
| உலகம் காத்திடும் இயற்கை வேளாண்மை | - | 30 |
| ஒவ்வொரு நாளும் மகளிர் தினம் | - | 30 |
| அம்மாச்சி வீடு | - | 31 |
| ஆதலால் நட்பு கொள்வீர்! | - | 32 |
| நன்றி! நன்றி! நன்றி! | - | 33 |
| திருவள்ளுவர் | - | 33 |
| பொங்கல் விழாக் கொண்டாட்டம் | - | 34 |
| புகைப்படத் தொகுப்பு | - | 38 |




# பள்ளி அறிக்கை 2019-2020

நாராயணன் நாராயணன், சிவசங்கர் சங்கரநாராயணன்





### பள்ளி வகுப்பறை வசதிகள்

இந்த ஆண்டு தமிழ்ப்பள்ளியின் பால்வின் கிளை, பதினான்கு வகுப்பறை வசதிகளுடன் The Cultural and Education Center இடத்தில் நடை பெற்று வருகின்றது. தமிழ்ப்பள்ளியின் மற்றொரு கிளை ஓபாலனில் Ofallon-Room No: 240 St Charles Common Council, 427 Spencer Rd, St Peters, MO 63376 இடத்தில் நடை பெற்று வருகின்றது. இந்த வசதியை நம் ஆசிரியர்கள் நன்கு பயன்படுத்தி, பொதுப்பள்ளிகளுக்கு இணையான தரத்தில் மாணவர்களுக்கு தமிழ் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடங்களை கற்பித்து வருகின்றனர். பால்வின் கிளையில் 250 குழந்தைகள், மற்றும் ஓபாலன் கிளையில் 54 குழந்தைகள் படித்து வருகிறார்கள்.

### முதல் நாள் - Aug 17, 2019

பள்ளி ஆரம்ப தினத்தன்று இருநூறுக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் தங்கள் பெற்றோர்களுடன் தமிழ் படிப்பதற்கு ஆர்வத்துடன் வந்தார்கள். தமிழ் தாய் வாழ்த்துப் பாடி, ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், குழந்தைகளை அன்புடன் அழைத்து தங்கள் வகுப்பறைக்கு கூட்டிச் சென்றார்கள். கோடை விடுமுறை முடிந்து பழைய நண்பர்களை பார்ப்பதற்கும், புதிய நண்பர்களை பற்றி அறிந்து கொள்ளவும், தங்கள் ஆசிரியர்களை பார்ப்பதற்கும் ஆவலாக இருந்தார்கள்.







### பெற்றோர் ஆசிரியர்கள் சந்திப்பு (பாடத்திட்ட சந்திப்பு) - Aug 24, 2019

ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் பெற்றோரைச் சந்தித்து அந்த கல்வியாண்டிற்கான பாடத்திட்டத்தை விளக்கினர். அந்த கல்வியாண்டில் குழந்தைகள் செய்யவிருக்கும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆசிரியர்கள் விளக்கினர். பெற்றோரின் அனைத்து கேள்விகளுக்கும் ஆசிரியர்கள் பதிலளித்தனர். இந்த சந்திப்பு, பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் நல்ல தொடர்புக்கு வழிவகுத்தது.

### தரமதிப்பீட்டு முறை

கடந்த ஆண்டு ஆசிரியர்களிடம் இருந்து பெறப்பட்ட பின்னூட்டத்தின் அடிப்படையில், மாணவர்களின் பள்ளி வருகைப்பதிவு, ஆண்டு செய்முறை பயிற்சி, வீட்டுப்பாடம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வண்ணம் இந்த கல்வி ஆண்டில் மாணவர்களின் தரமதிப்பீட்டு சதவிகிதத்தில் பின் வருமாறு சிறிது மாற்றம் செய்துள்ளோம்.

### தீயணைப்பு பயிற்சி - Sep 28, 2019

இரு கிளைககளிலும் நிறுவன கொள்கைகளின்படி தீயணைப்பு பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. பால்வின் கிளை தீயணைப்பு பயிற்சியில் 220 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் 60 தன்னார்வலர்கள் பங்கேற்றனர். அவர்கள் அனைவரும் 5 நிமிடம் 43 வினாடிகளில் பாதுகாப்பான வாகன நிறுத்துமிடத்திற்கு வந்தனர். இதே போன்று ஓபாலன் கிளையிலும் தீயணைப்பு பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

### பொங்கல் விழா - Feb 22, 2020

தமிழ் மொழியை நன்கு கற்றுத் தேர்ந்து வரும் நம் தமிழ்ப் பள்ளியின் இரு கிளை மாணவ மாணவியர்களும் , மிசௌரி தமிழ்ச் சங்கத்தின் பொங்கல் விழாவில் பங்கேற்று தங்கள் கலைத்திறனை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தினர் என்பதில் மிக்க மகிழ்ச்சி.

நம் தமிழ்ச் சங்கம் வழக்கம் போல், உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்று அருமையான மதிய










உணவு அளித்து, சரியான நேரத்திற்கு விழா நிகழ்ச்சிகளைத் துவக்கினார்கள். இவ்விழாவில், நம் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களின் சேர்ந்திசையை தொடர்ந்து, ஒபாலன் கிளை மாணவ மாணவியர் மற்றும் ஆசிரிய பெருமக்கள் “இப்படை வெல்லும் நிச்சயமே”என்ற தலைப்பில் முதலில் களம் இறங்கி வெற்றியின் மூல ரகசியத்தை அனைவருக்கும் கொண்டு சென்று மகிழ்ந்தனர். குழந்தைகளின் தன்னம்பிக்கையைத் தட்டி எழுப்பி, மழலைகளின் வண்ண வண்ண நடனத்தை வெளிப்படுத்தி, சூரிய ஒளி சக்தி, மரம் வளர்ப்பதின் முக்கியத்துவம், உடற் பயிற்சி , தவ பயிற்சி என்று பல பரிமாணங்களில் தங்கள் கலைத்திறன்களை வெளிப்படுத்தி அரங்கை அதிரச் செய்து ஒரு நல்ல அடித்தளத்தை நம் பொங்கல் விழாவிற்கு அளித்துச் சென்றனர்.

அதன் பின் களம் கண்ட நம்













பால்வின் கிளை மாணவ மாணவியர் மற்றும் ஆசிரியர்கள் “கீழடி முதல் - சந்திரயான் வரை தமிழன்”என்ற தலைப்பை மையக் கருத்தாக ஏற்றுத் தமிழரின் தாய்மடியாம் கீழடியின் பெருமையை வில்லுப்பாட்டாக நாட்டுப்புற பாடல் வடிவில் வடிவமைத்து வெளிப்படுத்தினர். இதைத் தொடர்ந்து தமிழர் வாழ்வியல், தமிழர்களின் குடும்ப இணைப்பு, தமிழும் தமிழனும், நட்பின் பெருமையைப் பாடல் வடிவிலும், ஓடி விளையாடு பாப்பா, தமிழ்நாட்டு சமையல் ,சாப்பாடு, தமிழிசை ஒலிக்கட்டும், பொங்கல் பண்டிகை கொண்டாட்டம், வீரச் சிலம்பம், நான் பேச நினைப்பதெல்லாம், எங்கள் வீட்டுக் கல்யாணம், கவிஞர்களின் கவி உலா, பெண்கள் நாட்டின் கண்கள் என்று பெண்களின் சிறப்புத் தன்மையையும் மற்றும் பெண்களின் சாதனைகளையும் கலை மற்றும் வண்ண மயமான நாட்டிய வடிவில் ஆசிரியைகளும் இணைந்து வெளிப்படுத்திய விதம் மிக மிகச் சிறப்பு. இதைத் தொடர்ந்து அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி போல் நம் பள்ளி இடைநிலை















மாணவர்கள் ஒரு நாள் இரவு நண்பனின் வீட்டில் சந்தித்து உரையாடும் காட்சி - கூகிள் நிறுவனத்தின் தலைமை நிறுவனம் ஆல்பாபெட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு. சுந்தர் பிச்சை பற்றிய தொகுப்புகள் மற்றும் அவரின் தொழில் நுட்ப சாதனைகளை விளக்கும் விதமாக நிகழ்ச்சி அமைந்தது மாணவர்களின் தலைமைப் பண்புகளை வளர்க்கும் முயற்சியே. அதன் பின் பறை, தமிழுக்குச் சமர்ப்பணம், ஸ்ரீஹரி கோட்டாவிலிருந்து தமிழ்ப் பள்ளி மாணவர்கள் என்ற கருத்தில் - நம் மாணவர்கள் சந்திரயான் 2 விண்கலத்தை ஏவுதளத்திலிருந்து இயக்கும் முறையை ஒலி மற்றும் ஒளி வடிவில் நம் கண் முன் நிறுத்தினர். ஒன்றா இரண்டா - அத்தனை நிகழ்ச்சிகளும் அருமை, அருமை, அருமை!! இந்த நிகழ்ச்சி முடிவில் நிகழ்ச்சியில் பங்கேற்ற அத்தனை குழந்தைகளையும் ஒன்றாக அணி வகுத்து மேடை ஏறியது அழகினும் அழகு!!

இந்த விழாவில் பங்கேற்க நமது இரு கிளை











மாணவ செல்வங்கள் மற்றும் ஆசிரியர்கள் செயின்ட் லூயிஸ் நகரின் பனிப்பொழிவையும் பொருட்படுத்தாமல் கடந்த மூன்று மாதங்களுக்கு மேல் பயிற்சி எடுத்து பொங்கல் விழாவைச் சிறக்கச் செய்தனர், இந்த விழா நிகழ்வுகள் நம் மனதில் பல ஆண்டுகள் நிலைத்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

நம் பள்ளி மாணவர்களுக்கு மிகப் பெரிய மேடை அமைத்துக் கொடுத்த தமிழ்ச் சங்க செயற்குழு, நிர்வாக குழு மற்றும் நிகழ்ச்சி வெற்றியடைய உழைத்த தமிழ்ப் பள்ளியின் இரு கிளைகளின் மாணவ செல்வங்கள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள், உதவியாளர்கள், சிறப்பு குறிப்பளித்தவர்கள், பள்ளியின் முதல்வர்கள், துணை முதல்வர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் மிசௌரி தமிழ்ப் பள்ளியின் நிர்வாக குழுவின் சார்பாகக் கோடான கோடி நன்றியை சமர்ப்பிக்கின்றோம்.













**தமிழ் என்னும் மணிவிளக் கேற்றடா நாட்டில்!**
**தமிழரின் நெஞ்சமாம் அழகான வீட்டில்!**
**அமுதென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை!**
**அறமென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை!**

என்ற பாவேந்தர் பாரதிதாசன் பாடலுக்கேற்ப மிசௌரி மாகாணத்தில் அமுதாக நினைத்து மனமகிழ்ச்சியுடன் செந்தமிழ்ப் பணியாற்றி அறம் சார்ந்து வாழ்ந்து வரும் தமிழ்ச் சங்கம் மற்றும் மிசௌரி தமிழ்ப் பள்ளி அன்பர்கள் அனைவரும் தரணி போற்ற வாழ்வீர்!! வாழ்க வளமுடன்!!

தற்போது உலகெங்கிலும் பாதித்துவரும் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க மார்ச் மாதம் முதல் பள்ளி நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அனைவரும் ஆவலோடு எதிர்பார்க்கும் தமிழ்த்தேனீ போட்டிகள் மற்றும் ஆசிரியர்களின் சுற்றுலா அடுத்த கல்வியாண்டில் நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

# இயற்கை - மழலை, நிலை 1



ரியா சிவராம்



அத்விக் சாய் மோகன்




அவினாஷ் செல்லப்பன்



ஆகாஷ் விஜயசந்தரம்



ஆதித்யா விஜயசந்தர்



ஆராத்யா கலைச்செல்வன்



ஆல்பினா ஜோசப்



கவிஷ் சட்டநாதன்



கவுதம் ஜெயப்பிரகாஷ்



கௌதம் கிருஷ்ணா பிரபாகர்



க்ஷேத்ரா கந்தசாமி



சக்திஸ்ரீ சிக்கல் குமார்


தனிஷ்கா சந்திரசேகரன்


தீரா ராணி


பிரதியுன் மூர்த்தி


மஹதி சங்கர நாராயணன்


மோவிதா சுரேஷ்


விக்னேஷ் செல்லப்பன்


அபர்னா பாடுறு


பெரோனியா இராபர்ட் ராஜகுமார்


இயலினி சாமிநாதன்


தேவ் வித்யூத் கமலக்கண்ணன்


நவ்னீத் ஜானகிராமன்


நித்ரா கருணாகரன்


மகேஷ் போடப்பாட்டி


முகமது வசீம்


லெவின் பிரவீன்


வருணிகா அருண் கார்த்திக்


வருண் காமேஷ்


வர்ஷிதா பாலாஜி


விதுர் ராயப்ரோலு


சாய் சஞ்ஜனா ராம்கோபால்


சாய் வைஷ்ணவி போடப்பாட்டி


சித்தார்த்தன் சிக்கல் குமார்


தலின் சமுத்திரவேல் முத்துக்குமார்


ஸ்ரீவர்ஷினி கிங்ஸ்ரீ


ஸ்ரீவைஷ்ணவி ஆறுமுகம்


அஜய் கிருஷ்ணா சங்கர்


சித்தார்த் ராஜசேகர கண்ணன்


சிரேஷ்தி சிவசண்முகம்


சுவாதி கார்த்திகேயன்

# உங்களுக்கு தெரியுமா?



கீழடி அகழ்வாய்வில் ஆறு பக்கங்களைக் கொண்ட பகடைக் காய்கள் கிடைத்துள்ளன. சங்க இலக்கியமான கலித்தொகையில் சொல்லப்படுவது போன்ற தாயக்கட்டைகளான இவை பத்து என்ற எண்ணைத் தரக்கூடியவை. இதன் மூலம் கி.மு. 6ம் நூற்றாண்டிலேயே தமிழர்கள் எழுத்தறிவு பெற்றிருந்தார்கள் என்று தெரிகிறது. இதுபோல 600 விளையாட்டுப் பொருட்கள் கிடைத்துள்ளன. இவை ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் விளையாடக்கூடியவை. விளையாட்டிற்கு நேரம் ஒதுக்கும் அளவிற்கு வேலைகளை நேரஒதுக்கீடு செய்துகொண்ட சமூகமாக அங்குள்ளவர்கள் இருந்திருக்கக்கூடும் என்பதற்கான ஆதாரமாக இந்த காய்கள் இருக்கின்றன.

*தகவல்: bbc.com/tamil*

*புகைப்படம்: தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை*

# காலங்கள் - நிலை 2, நிலை 3



ரேவந்த்குமார் இளங்கோ




ஆதிஷ் ஸ்ரீகாந்த்



நித்திஷ் குமார் விஜயகுமார் நித்யா



தர்ஷ் கோகுல் கிருஷ்ணன்



ஹரிணி அருண்குமார்



அக்ஷரா ரமேஷ்



அக்ஷயா காசிராஜன்



அனிஷ் பிரபாகரன்




ஆதர்ஷ் ராம் அருண்குமார்



ஆரவ் தர்மராஜ்



ஆருஷி கோகுலகிருஷ்ணன்



இனியா சரவணன்


கவின் ராம் கௌரி சங்கர்


சான்வி பாண்டுரங்கன்


சாய்கிரித்திக் விமலாதித்தன்


சார்விகா சுமன்


சுஷ்மிதா செந்தில்குமரன்


சௌம்யா ஜானகிராம்


தீக்ஷா முத்துராமன்


தெய்வஸ்ரீ ராமகார்த்திகேயன்


நஷாத் ரிஸ்வான் நூருல் ரஃபிக்



நிகிலேஷ் சமுத்திரவேல் முத்துக்குமார்


பவேஷ் வைத்யா சந்திரசேகரன்


பிரணவ் பாஸ்கர்


மஞ்சரி ராஜா வினோதா


ம்ரிதுளா கார்த்திக்


ரிஷ்வந்த் ஆறுமுகம்


ஸ்ரீஹர்ஷினி கிங்ஸ்ரீ


சஹானா ஆனந்த்



அக்ஷயா பூபதி


அனுத்ரிகா முருகானந்தம்


கனிஷ் டில்லிபாபு


கிருத்யா கருணாகரன்


சஞ்சிதா ராஜகோபால்


சஹானா பரதன்


ஜஸ்மிதா கமலேஷ்



ஜேசு ஸ்டீவ் ஜேசு பெனின்



திவித் கனகராஜ்



நேஹா ஸ்ரீராம்



பிரதிக்ஷா கோகுல் ராஜசூரியா




மதுஷினி சதீஷ்குமார்



ஷிவானி முருகன்



ஸ்ரீபாலாஜி ராஜமாடசாமி



நவீன் ஜெய்கணேஷ்



சித்தார்த் வேங்கவாசி

# தமிழர் பருவ காலங்கள்



தமிழர்கள் ஓர் ஆண்டை ஆறு பருவங்களாக பிரித்தனர்.
கார்காலம் (மழைக்காலம்): தமிழ் மாதமான ஆவணி, புரட்டாசி.
கூதிர்காலம்: ஐப்பசி, கார்த்திகை; இலைகள் கூம்பி உதிர்வது கூதிர் எனப்படும்.
முன்பனிக்காலம் (விடியலில் பனி பெய்வது): மார்கழி, தை.
பின்பனிக்காலம் (காலையில் பனி பெய்வது): மாசி, பங்குனி.
இளவேனில்காலம் (வசந்த காலம்): சித்திரை, வைகாசி.
முதுவேனில்காலம் (கோடைக்காலம்): ஆனி, ஆடி.

தகவல்: wikipedia

# அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? - நிலை 4



அன்பு முக்கியமானது, ஏனென்றால் அன்பு இல்லாமல் உலகம் ஒரு போர் மண்டலமாக இருக்கும். எல்லையற்ற அன்பு இந்த உலகையே இயங்க வைக்கிறது.நமக்குள் அன்பு இருந்தால் மகிழ்ச்சி, அக்கறை, பகிர்வு,நட்பு மற்றும் அமைதி பொங்கி வழியும். அன்பு இருந்தால் எதற்கும் பஞ்சம் இருக்காது.

**அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை.**

அறியாதவர், அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர்; ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாக நிற்கின்றது.

**ஆடோன் ஜெய்ரஸ்**



நம் வாழ்க்கையில் மிக முக்கியமான உணர்ச்சிகளில் ஒன்று அன்பு. அன்பில்லாத வாழ்க்கை முழுமையற்றது மற்றும் அர்த்தமற்றது. இதை தான் காந்தியடிகள் 'எங்கு அன்பு உள்ளதோ அங்கு வாழ்க்கை உள்ளது' என்று கூறியுள்ளார். அன்பில்லாத வாழ்க்கை வண்ணங்கள் இல்லாத வானவில் போன்றதாகும். அதில் எந்த அழகும், பார்ப்பதற்கு மகிழ்ச்சியும் இருக்காது. அன்பு காட்டுவது மூலம் சோர்வுற்ற உள்ளத்தையும் நம்பிக்கை ஊட்டி வெற்றி அடைய செய்ய முடியும். அன்பு மட்டுமே இதனை செய்ய முடியும். பணமோ பொருளோ செய்ய முடியாது. மேலும் அன்பை பற்றி திருவள்ளுவர்:

**'அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று'**

என்று கூறியுள்ளார். இதன் பொருள்: உள்ளத்திலே அன்பு இல்லாதவருடைய இல்வாழ்க்கையானது வன்மையான பாலை நிலத்திலே காய்ந்த மரம் தளிர்த்தாற் போல நிலையற்றது.

**சந்தீப் பாஸ்கர்**



நாம் எல்லோரிடமும் அன்பாக இருக்க வேண்டும் ஏன் என்றால்,

1) அன்பாக இல்லை என்றால் நமக்கு நண்பர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். நண்பர்கள் இல்லை என்றால் நாம் தனிமையிலும் வேதனையிலும் வாட வேண்டும்

2) அன்பாக இருக்கும் போது நம்மை அனைவருக்கும் பிடிக்கும். எல்லோரும் நம்முடன் நம்பகத்தன்மை உடன் இருப்பார்கள். மற்றும் அவர்களும் நம்மிடம் கனிவாக நடந்து கொள்வார்கள். இந்த உலகத்தில் அன்பு ஒன்றே உண்மையானது. அன்போடு இருப்போம். மகிழ்ச்சியாக வாழ்வோம். நன்றி

**சுருதி ஜெயபிரகாஷ்**



நாம் எப்படி எல்லோரிடமும் நடந்து கொள்கிறோமோ, அது போல அவர்களும் நம்மிடம் நடந்து கொள்வார்கள். நாம் அன்பாக இருந்தால் நிறைய நண்பர்கள் கிடைப்பார்கள். நம் பள்ளியில் யார் மிக அன்புடன் பழகுகிறார்களோ அவர்கள் தான் நமக்கு சிறந்த நண்பர்கள். அன்பாக இருந்தால் நம் உள்ளமும் மகிழ்ச்சியாக இருக்கும்.

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு** - என்ற குறளின்படி

அன்பு இருக்கும் உடல் தான் உயிர் உள்ள உடல். அன்பு இல்லாதவர்கள் உடல் வெறும் தோலால் மூடப்பட்ட எலும்புகள் ஆகும்.

**தனிஷ் சட்டநாதன்**

அன்பு என்பது வார்த்தைகளால் விவரிக்க முடியாத செய்கையால் மட்டுமே உணரக்கூடிய ஒரு ஒப்பற்ற உணர்வாகும். நாம் மற்றவர்களிடம் செலுத்தும் அன்பானது பெருகுமே அன்றி குறையாது.

நம் முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் மரணமடைந்த போது பல குழந்தைகள் அழுதனர். இதற்கு காரணம் அவர் குழந்தைகள் மீது கொண்டிருந்த அன்பும், அவர்பால் குழந்தைகள் கொண்டிருந்த அன்புமே ஆகும். அன்பு இன்றியமையாதது ஏனெனில் அன்பில் இருந்து பிறப்பது கருணை. கருணை உள்ளம் உடையவர்கள் மற்ற உயிருக்கு எந்த நிலையிலும் தீங்கு செய்ய எண்ணமாட்டார்கள். முழுமையான தாயின் அன்பைப் பெற்ற ஒரு குழந்தை மானிடத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும். இதற்கு சான்று மகாத்மா காந்தி, அன்னை தெரசா போன்றோர் ஆவர். அன்பு மிகுந்தவர்கள் தம் உடைமையையும் பிறருக்கு உரிமையாக்கி வாழ்வார்கள்.திருவள்ளுவர் திருக்குறளில் “அன்புடைமை” என்னும் அதிகாரத்தில் அன்பின் சிறப்புகளைப் பற்றி மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார். எனவே நாம் அனைத்து உயிர்களிடத்திலும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.



**ஸ்ருதி சங்கர நாராயணன்**

புகைப்படம்: தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை





மற்றவர்களிடம் அன்பு செலுத்துவது முக்கியம். அது நம் முன்னால் உள்ளவர்களை அவர்கள் பாராட்டிற்கு உரியவர்கள் என்பதை காட்டுகிறது. அது மனித இனத்தை அமைதியாக வாழ உதவுகிறது.

**நரேந்திரா ரமேஷ் பாபு**



அன்புடையார் தன் உடல், பொருள், ஆவி அனைத்தும் பிறருக்கென வாழ்பவர்கள். அவர்களுடைய அன்பானது தற்பெருமை கொள்ளாது, தன்னை புகழாது, பொறாமை கொள்ளாது, எளிதாக கோபம் அடையாது, கடுமை கொள்ளாது. அன்பு பொறுமை உள்ளது, தன்னலமற்றது, தனக்கு எதிராக இழைக்கப்படும் தீங்குகளையும் நினைவுகொள்ளாது. எனவே பிறக்கின்ற எல்லா உயிர்களிடத்தும் அன்புடன் வாழ கற்றுக்கொள்ள வேண்டும்.

**பெலிசியா இராபர்ட் ராஜகுமார்**



அன்பு காட்டுவது ஒரு உயர்ந்த பண்பு, அன்பு இருந்தால்தான் நம் அறிவு பயனுள்ளதாக இருக்கும்,இந்த உலகம் அன்பு என்ற ஒரு குடையின் கீழ்தான் இயங்குகிறது !நாம் பிறரிடம் எவ்வளவு அன்பை எதிர்பார்க்கிறோமோ அதைவிட அதிகமாக அடுத்தவர்மீது அன்பாக இருக்க வேண்டும்!

**ஸ்ரீநிதி சிக்கல் குமார்**



அன்போடு இருந்தால் நாம் மகிழ்ச்சியாக இருப்போம். எல்லோரும் ஒற்றுமையாக இருப்போம்.நாம் யாரையாவது அக்கறையுடன் கவனித்துக் கொண்டால் (take care) அது அன்பு காட்டும் ஒரு வழி.நாம் யாருக்காவது உதவி செய்தாலும் நம் அன்பு வெளிப்படும்.

**வித்யுத் காமேஷ்**



மனிதநேயம், இரக்கம், பாசம் ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு எனப்படுகிறது. அது ஒருவருக்கு ஒருவர் காட்டுவது. அது நம் உறவுகளாகவோ நண்பர்களாகவோ இருக்கலாம். நாம் அன்பு காட்டுவது அவர்களுக்குத் தெரிந்தும் இருக்கலாம் தெரியாமலும் இருக்கலாம்.

வெளிப்படுத்த தெரியாத அன்பு கூட பேரன்பு தானே... அன்பு இல்லாமல் இந்த உலகம் இல்லை. ஒருவருக்கு அன்பு தெரியவில்லை என்றால் அவர்களுக்கு நண்பர்கள், உறவினர்கள் இல்லை என்று அர்த்தமாகும். நல்ல அன்பு பெற்ற ஒருவர் நல்ல மனிதனாக இந்த உலகில் வாழ முடியும். அன்பு ஒன்றே இந்த உலகினை வாழ வைக்கின்றது. அனைவரிடமும் அன்பை விதையுங்கள். அன்பைப் பெறுங்கள். அனைவரும் வாழ்க்கையில் முன்னேறுவோம்.

நம்மிடம் ஒன்றுமே இல்லாவிட்டாலும் தர்மம் செய்ய ஒன்றே ஒன்று அளவற்றதாக உள்ளது - அது அன்பு. அன்பே கடவுள்!!

**- விபு ருமேஷ்**

# மனதில் நிற்கும் பயணம் - நிலை 5

## தாவரவியல் பூங்கா

நான் ஒரு முறை பள்ளிச் சுற்றுலாப் பயணத்திற்காக தாவரவியல் பூங்காவிற்கு நண்பர்களுடன் சென்றேன். உண்மையானவை என்று நான் நினைக்காத நிறைய தாவரங்களைப் பார்த்தேன். அன்று வரை, நாம் வாழ்கின்ற பூமியில் இரண்டு வகையான கற்றாழை மட்டுமே இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஐந்துக்கும் மேற்பட்ட கற்றாழை வகைகளைப் பார்த்து வியப்படைந்தேன்.மேலும் பல்வேறு வகையான அழகான செடிகள் மற்றும் மரங்களைப் பார்த்து வியப்படைந்தோம்.அதோடு மட்டுமல்லாமல், மழை வருவதற்கு மரங்கள் அவசியம் என்பதையும் அறிந்து கொண்டோம். உடனே நானும் ஒரு மரத்தை நட ஆசைப்பட்டேன். ஒரு பிளாஸ்டிக் பானையை எடுத்து மூன்று கப் மணலைப் போட்டேன். நான் விதைகளை மணலில் நட்டு அதற்குத் தண்ணீர் பாய்ச்சி வளர்த்துக் கொண்டிருக்கிறேன். நான் ரசித்த பயணத்திற்கு நீங்களும் சென்று மகிழ்ச்சிய டையுங்கள். ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் ஒரு மரம் நட்டு நல் உலகை நல்குவோம். மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்.



ஆன்ட்ரோனிகஸ் அமல்அந்தோணிசாமி

## மேற்கு கடற்கரைப் பயணம்
### (Road Trip of a Lifetime)

சாண்டியாகோ நகரிலிருந்து சான்பிரான்சிஸ்கோ வரை பசிபிக் கடற்கரைச் சாலையில் காரிலேயே பயணித்தோம்.
சாண்டியாகோ நகரம் மெக்சிகோ நாட்டின் எல்லையை ஒட்டி இருப்பதால், அம்மக்களின் உடை, உணவு, பழக்கவழக்கங்கள் அனைத்தும் ஸ்பானிய கலாச்சாரமாகவே இருந்தது.
இந்திய, அமெரிக்க கலாச்சாரங்களையே பார்த்து வந்த எனக்கு, இது ஒரு சிறந்த புதிய அனுபவமாக இருந்தது.
அடுத்து, லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் டிஸ்னி லேண்ட் தீம் பார்க்கில் விளையாடினோம். பயணம் முழுவதும் பசிபிக் பெருங்கடலை ஒட்டியே இருந்ததால் இயற்கைக் காட்சிகளையும், கடற்கரையையும் ரசித்துக் கொண்டே பயணித்தோம்.
சான் பிரான்சிஸ்கோ நகரில் கோல்டன் கேட் (Golden Gate Bridge) என்ற அதிசயப் பாலத்தைப் பார்த்தேன். இந்த பயணத்தில் நான் கற்றுக் கொண்டது, பூமியின் சுற்றுச் சூழலை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.



சஞ்சனா திரவியம்

## நியூ ஆர்லியன்ஸ்

நான் மிகவும் ஞாபகம் வைத்திருக்கும் குடும்பச்சுற்றுலா நாங்கள் நியூ ஆர்லியன்ஸ் போனது. நாங்கள் இங்கிருந்து விமானத்தில் பயணம் செய்தோம். நாங்கள் விமானத்திலிருந்து கீழே இறங்கி தங்கும் விடுதிக்கு காரில் போனோம். நாங்கள் நிறைய இடங்களைப் பார்த்தோம். நாங்கள் சதுப்பு நிலத்திற்குப் போய் முதலைகள் பார்த்தோம். நான் ஒரு சிறிய முதலையைக் கையில் பிடித்தேன்.

நங்கள் WWII அருங்காட்சியகத்திற்குப் போனோம். நாங்கள் நியூ ஆர்லியன்ஸ் போர் நடந்த இடத்திற்குப் போனோம். நாங்கள் ஹாப் ஆன் ஹாப் ஆப் (Hop on Hop off) பேருந்தில் நிறைய இடங்களுக்குப் போனோம், உதாரணத்திற்கு கஃபே டுமாண்டே, பிரெஞ்சு குவாட்டர், மற்றும் கார்டன் டிஸ்ட்ரிக்ட்டிற்கு போனோம். நியூ ஆர்லியன்ஸ் பயணம் மிகவும் நன்றாக இருந்தது.



சம்யுக்தா
ரமேஷ் பாபு

## ஹவாய்

ஹவாய் எனக்கு மறக்கமுடியாத விடுமுறை இடமாகும். ஹவாயில், நான் நிறைய இடங்களைக் கண்டேன். ஹலேகலா மற்றும் டயமண்ட் பள்ளங்களைக் கண்டேன். ஹலேகலா ஒரு கேடயம் எரிமலை, ஆனால் டயமண்ட் பள்ளம் என்பது வைர வடிவிலான ஒரு பள்ளம். ஹவாய் ஒரு தீவு என்பதால் நான் கடற்கரைகளுக்குச் சென்றேன். பிக் தீவில், எனக்குப் பிடித்த
கடற்கரைகளில் ஒன்று மேஜிக் சாண்ட் பீச். நான் காலையில் அங்கு சென்றபோது மணல் மிகவும் மென்மையாகவும், தண்ணீர் சூடாகவும் இருந்தது. வரலாற்று முக்கியமான முத்து துறைமுகம்(Pearl Harbor) பார்த்தேன். பல வித்தியாசமான மற்றும் தனித்துவமான நீர்வீழ்ச்சிகளும் இருந்தன. நான் விரும்பிய ஒரு நீர்வீழ்ச்சி ரெயின்போ நீர்வீழ்ச்சி. சூரியன் வெளியேறும்போது அதில் வானவில்லைக் காணலாம். ஊதுதுளை (blow hole) பார்க்க அற்புதமானது. காற்று வீசும்போது, அலைகள் அதன் துளைகளில் செல்ல, கடல் நீரை உயரே தெளிக்கிறது. பிக் தீவில் நான் சென்ற எல்லா இடங்களிலும் எரிமலை பாறைகள் இருந்தன! ஹவாய் ஒரு சிறந்த, மறக்கமுடியாத விடுமுறை இடமாகும்.



மிரிதினி
நந்தகுமார்

# வெற்றி நிச்சயம்

**சுஜீத்பாலா ராஜகோபால்** நிலை 7



ஒரு சிறிய கிராமத்தில் இரண்டு புத்திசாலி சிறுவர்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் மிகவும் தைரியசாலிகள். தங்களுக்குள் யார் அதிக திறமை வாய்ந்தவர்கள் என்று நிரூபிக்க இருவரிடையே ஒரு போட்டி வைத்தனர். அந்தப் போட்டி என்னவென்றால் ஒரு பழங்காலத்து, இடிந்து விழும் நிலையில் உள்ள, யாரும் பயன்படுத்தாத ஆற்றுப் பாலத்தில் நடந்து செல்வது.

போட்டி நாளன்று இருவரும் தயாராக வந்தனர். முதல் சிறுவன் தனது இஷ்ட தெய்வத்தை வேண்டிக்கொண்டு பொறுமையாகவும், தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் பாலத்தின் மீது மெதுவாக நடக்க ஆரம்பித்தான். பாலத்தை கடந்து அப்பகுதிக்கு சென்று விட்டான். தற்போது இரண்டாவது சிறுவனின் முறை. தனது நண்பன் மிக சுலபமாக பாலத்தைக் கடந்து விட்டதாக கருதி, மிகவும் தைரியத்துடனும், நாம் இதில் சுலபமாக கடந்து விடலாம் என்று கருதி வேகமாக நடக்க ஆரம்பித்தான். சிறிது தூரம் நடந்ததும் அவனுக்கு பயமாக இருந்தது. தனது கண்களை இறுக மூடிக்கொண்டு நடப்பதை நிறுத்தி விட்டான். அவனுக்கு, தான் பாலத்தைக் கடந்து விடுவோமா என்ற சந்தேகம் எழ ஆரம்பித்தது. அந்த பயத்துடனும் சந்தேகத்துடனும் மெதுவாக நடக்க ஆரம்பித்த அவன் தடுமாறி, ஆற்றுக்குள் விழுந்து தோல்வி அடைந்தான்.

கதையின் கருத்து :

**தன்னம்பிக்கையுடன் எந்த செயலைச் செய்தாலும் வெற்றி நிச்சயம்.**







# வீட்டுப்பாடம்



**பிரஜித் ராயப்ரோலு நிலை 7**

**முன்னுரை;**

பாலு என்கின்ற மாணவன் வகுப்பில் சிறந்து விளங்குபவன். அவன் வகுப்பின் தலைவன் ஆவான்.



ஒரு நாள் பாலுவின் ஆசிரியர் நிறைய வீட்டுப்பாடம் கொடுத்திருந்தார். மாலை வீட்டுக்குச் சென்ற பாலு, வீட்டுப்பாடத்தை முற்றிலுமாக மறந்துவிட்டு, தனது நண்பர்களுடன் வெளியே விளையாடச் சென்றான். வீட்டுக்குத் திரும்பிய பாலு மிகவும் சோர்வாக இருந்தான். வீட்டுப்பாடத்தை முற்றிலுமாக மறந்து தூங்கச் சென்றான்.

அடுத்த நாள் ஆசிரியர் எல்லோருடைய வீட்டுப்படங்களைச் சேகரித்தார். பாலு வீட்டுப்பாடம் செய்யவில்லை. பாலுவுக்கு மதிப்பெண்கள் குறைந்தன. பாலு மிகவும் வருத்தமுற்றான்.

அன்றிலிருந்து, பாலு தனது வீட்டுப்பாடங்கள் அனைத்தையும் விளையாடச் செல்வதற்கு முன்பு முடித்தான். அடுத்த நாள் ஆசிரியர் பாலுவின் செயலை எண்ணி மிகவும் பெருமிதம் கொண்டார். பாலுவுக்கு முழு மதிப்பெண் வழங்கினார். பாலு மகிழ்ச்சி அடைந்தான்.

**முடிவுரை;**

**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனான் பவர்க்கு.**

காலம் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை இந்த மூன்று பண்புகளும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டியவை. இந்த திருக்குறளுக்கு ஏற்ப மாணவர்கள் ஆகிய நாம் என்றும் வீட்டுப்பாடங்களை முடித்த பின்பே விளையாட செல்ல வேண்டும்.

நன்றி,

# அனிதாவும் அக்குராவும்

## மணிஷா விஜய், நிலை 8

முன்னொரு காலத்தில் அனிதா என்ற பெண்மணி ஒரு கிராமத்தில் வசித்து வந்தாள். அங்கு உலகத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்த அக்குரா என்ற அதிசயக்கல் அக்கிராமத்தினர் அனைவராலும் நேசிக்கப்பட்டு வந்தது. அந்தக்கல் தொலைந்தாலோ திருடப்பட்டாலோ இந்த உலகமே இரண்டு நாட்களில் அழிந்து விடும் என நம்பினர். இந்நிலையில் ஒரு நாள் வானம் குருதி வண்ணத்தில் மாறியது.



இது ஹாவல் புல்டிலிருந்து வரும் வாலுள்ள மிருகத்தின் வருகைக்கான அறிகுறி எனவும், அது எப்படியும் அந்தக் கல்லை எடுத்துச் சென்றுவிடும் என அக்கிராமத்தினர் நம்பினர். அந்த மிருகமும் கல்லைக் கவர்ந்து சென்றது. அதனை தடுத்து காப்பாற்ற பெருமுயற்சி செய்தனர். அது இயலாத நிலையில் அக்கிராமத்தின் தலைவர் அந்தக் கல்லைக் காக்கும் சக்தியுடைய ஒரே பெண்ணான அனிதாவிடம் சென்றனர். அவளிடம் பலம் வாய்ந்ததும் கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டதுமான அற்புதமான வாளைக் கொடுத்தனுப்பினர்.

அந்த மிருகத்தின் பலம் உள்ள பகுதி கண் என்ற ரகசியத்தையும் சொல்லி அனுப்பினர். அவளுடைய முதல் இரண்டு முயற்சிகளிலும் தோல்வி அடைந்தாள். இருந்தாலும் அவள் நம்பிக்கையை கைவிட வில்லை. எவ்வளவோ முயன்றும் ஒரு அம்பு மட்டும் எஞ்சிய நிலையில் மிகவும் உன்னிப்பாக கணித்துக் குறி வைத்து சரியாக கண்ணில் எய்தினாள். அது சரியாக பாய்ந்து அம்மிருகத்தை சாம்பலாக்கியது. அந்த அதிசயக்கல்லையும் மீட்டுக்கொண்டு வந்தாள். கிராமத்தினர் அனைவரும் அவளை பாராட்டினர். அந்த அதிசயக்கல்லை உறுதியான இரும்பு பெட்டியில் வைத்து பாதுகாத்தனர். அவளும் கிராம மக்களும் மிகவும் நிம்மதியடைந்தனர்.

**நீதி: விடா முயற்சி பெரும் வெற்றியைத் தேடித் தரும்.**



# சிறுத்தைப்புலியை அடக்குவது எப்படி

## ஹ்ருதய் வி. சுஸ்வரம் நிலை 8



ஹோசேயும் கார்லோசும் வடக்கு பெருவில் ஒரு கிராமப் பகுதியில் அமேசான் மழைக்காட்டின் அருகில் வாழ்ந்தார்கள். அவர்கள் இருவரும் நல்ல நண்பர்கள். அவர்கள் ஏழையாக இருந்தாலும் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஹோசே குண்டாகவும், கார்லோசு மிக ஒல்லியாகவும் இருப்பார்கள். அவர்கள் ஆறாம் வகுப்பில் படித்து வந்தார்கள். அவர்கள் தோற்றத்தைப் பார்த்து பள்ளியில் சில சிறுவர்கள் அவர்களை தினமும் கேலி செய்வார்கள்.

ஒரு நாள், பள்ளியில் சிறுவர்கள் கேலி செய்யும்போது கார்லோசு அவர்களிடம், “எப்போது இதை நிறுத்துவீர்கள்?” என்று கெஞ்சினான். அதற்கு பாப்லோ என்ற சிறுவன், “முதலில், நீங்கள் இரண்டுபேரும் மழைக்காட்டுள் நுழைந்துவிட்டு உயிரோடு திரும்பி வாங்க!” என்று திமிராக பதில் சொன்னான். இதை கேட்டு எல்லா சிறுவர்களும் சிரித்தார்கள். கேலி செய்வதை நிறுத்தவில்லை. அவர்கள் சிரித்ததற்கு என்ன காரணம்? அந்த மழைக்காட்டில் ஒரு கொடிய சிறுத்தைப்புலி வாழ்ந்தது. அது காட்டில் நுழையும் மனிதர்களை கொன்று விடும். இதனால் மக்கள் மிகவும் பயந்தார்கள். யாராவது இந்த மிருகத்தை கொன்றால், அவர்களுக்கு 3,375 சோல் ($1000) பரிசு என்று அரசு அறிவித்திருந்தது. ஆனால் யாருமே காட்டிற்குள் போகவில்லை.

வீட்டுக்கு வந்த ஹோசேயும் கார்லோசும் தங்கள் குடும்பத்தினரிடம் இந்த செய்தியை சொன்னார்கள். “நாங்கள் மழைக்காட்டுக்குள் போகப்போறோம்!” என்றார்கள். மிகவும் பயத்தோடு அவர்கள் குடும்பத்தினர், “போகக் கூடாது!” என்று சொன்னார்கள். அப்போது ஹோசேயின் தாத்தா மட்டும், “அவர்கள் போகட்டும்!” என்று சொன்னார். அவர்கள் காதில் ஒரு திட்டத்தையும் சொன்னார். எல்லாரும் ஒருவழியாக சமாதானம் ஆனார்கள்.

அடுத்த நாள், ஹோசேயும் கார்லோசும் மழைக் காட்டுக்குள் கையில் கத்தியோடு நுழைந்தார்கள். காட்டுக்குள் ரொம்ப தூரம் நடந்தபோது பறவைகள் மற்றும் குரங்குகளின் ஓசை காட்டின் எல்லா திசைகளிலும் கேட்டது. ஒரு அருவி பக்கம் வந்தபோது, கார்லோசு தெரியாமல் ஒரு அனக்கொண்டாவை (பெரிய பாம்பு) மிதித்து விட்டான். பசியோடு இருந்த அனக்கொண்டா அவர்களை துரத்தியது. முட்டாள்களாக ஒரு குகைக்குள் ஓடினார்கள். உள்ளே ரொம்ப இருட்டாக இருந்தது. திடீரென்று ஒரு உறுமல் சத்தம் கேட்டது. அனக்கொண்டாவையும் காணவில்லை. “ஓ! இது தான் சிறுத்தைப்புலியின் வீடு!” என்று உணர்ந்து, பயத்தில் குகையை விட்டு வெளியே ஓடினார்கள். கால் தடுக்கி சகதியான மழைக்காட்டு தரையில் விழுந்தார்கள். உடனே எழுந்த ஹோசே, “கார்லோசு! என் தோள் மேல் ஏறு!” என்று கத்தினான். கார்லோசு ஹோசே தோள்மேல் ஏறினான். இரண்டு பேரும், கைகளை ஆட்டிக்கொண்டு உரக்க கத்தினார்கள். சிறுத்தைப்புலி வெளியில் வந்தது. இவர்கள் உடம்பு முழுதும் சேறாக இருந்ததை பார்த்ததும், அவர்கள் கத்தியதை கேட்டும் மெல்ல குகைக்குள் போய்விட்டது. உடனே இரண்டு பேரும் வேகமாக, மூச்சுவாங்க ஓடி, மழைக்காட்டுக்கு வெளியே வந்தார்கள்.

அன்றுமுதல் ஹோசேயும் கார்லோசும் பள்ளியில் பிரபலமானார்கள். சிறுவர்கள் அவர்களை கேலியே செய்யவில்லை. “சிறுத்தைப்புலி ரொம்ப உயரமான இரையை பார்த்தால் பயந்துவிடும்” என்று தாத்தா சொன்னது உண்மைதான் என்று நினைத்து இருவரும் மகிழ்ந்தார்கள்.





# துள்ளி வரும் காற்றே!

சுட்டெரிக்கும் சூரியனுக்கு சில்லென்று சவால்விட்டு
உயிரற்றவையை உயரே பறக்கச்செய்து
குதூகலிக்கும் சுட்டிக் குழந்தை நீ!

மேகத்தின் கதறலை தாளத்துடன் செவிநிறைத்து
வேயின் துளை புகுந்து வேணுகானமாகி
இயற்கையின் இனிய இசையமைப்பாளன் நீ!

கடலலை ரகசியத்தை சங்கினுள் சேகரித்து
மாமலைகளை தழுவியுரையாடி எதிரொலித்து
மௌன உலகின் தவம் கலைத்த மொழி நீ!

வாய்ந்த மரங்கள் தலைசாய்ந்து வரவேற்க
பூந்தென்றலாய் புன்னகைத்து, மறுநொடி
விருட்சத்தை வீறுகொண்டு வேரறுக்கும் மாயாவி நீ!

உறவின் அருமை பிரிவில் என்பர்தம்
உயிர்துடிக்க ஓயாது உழைக்கும்
உருவமில்லா உறவினன் நீ!



ரம்யா ஜானகிராம்

# நீர்க்குமிழி உதித்து மறைந்தது!

விழிக்கும் தருணத்தில் பொங்கி எழும்பும் எண்ணங்கள்
எங்கே அடங்கியிருந்தது உறக்கத்தில்?

நோக்கத்தோடு சில, இம்மைக்குரிய சில...

விலங்கிலிருந்து நம்மை வேறுபடுத்திய இவ்வெண்ணங்கள் நம்மை வேட்டையாடி ஆட்கொண்டது எப்போது?

ஆழ்மனதிலிருந்து குமிழி குமிழியாய் உதிக்கும்

மலையென கவனத்தை ஈர்க்கும் சில, பனியென உருகிடும் சில..

ஏன் எப்போதாவது கேட்டதுண்டா? அமைதியில் அமர்ந்து யோசனையில்லாமல் உணர்ந்ததுண்டா?

அறிவின் ஆதாரமாய், ஆக்கலும் ஆற்றலும் எண்ணங்களின் செயல்பாடுகள் அல்லவா?

எண்ணங்கள் இல்லாத மூடராய் இருப்பதில் என்ன விழிப்புணர்வு?

கேட்க வைப்பதே மனக்குதிரையை ஓட்டும் “எண்ணம்” என்பதே வேடிக்கை!

ஊழியாய் கிளர்ந்த மனதின் அடியின் ஆழத்தில்

எண்ணம் என்ற உடையணியாத, பெயரில்லாத, பிறப்பறியாத,

நிர்குணமான அமைதியில்..............

நீயும் நானும்..ஏன் உலகம் முழுவதுமே ஒரே அலகு!!



எழிலரசி செந்தாமரை





# ஆட்டோகிராப்

அரணை கயிற்றில் இறுக்கிய கால்ச்சட்டை எங்கே?
ஒட்டிக்கோ கட்டிக்கோ வேட்டி இங்கே!!

ஊருக்கே ஒரு தொலைபேசி இருந்த தபால் அலுவலகம் எங்கே?
ஊரெல்லாம் கைபேசியோடு மக்கள் இங்கே!!

வாரம் ஒருமுறை கூட்டமாய் கண்டுகளித்த ஒலியும் ஒளியும் எங்கே?
வாரமெல்லாம் பார்க்க வசதியிருந்தும் இயந்திர வாழ்க்கை இங்கே!!

பம்பரம் குண்டு கில்லியென விளையாடிய நண்பர்கள் கூட்டம் எங்கே?
எக்ஸ்பாக்ஸ் பப்ஜி என ஆன்லைனில் மூழ்கிப்போன இளைஞர்கள் இங்கே!!

ஆண்டுக்கு ஒருமுறையே நிழற்படம் எடுக்க முடியாத நம் பள்ளிப்பருவம் எங்கே?
வருடமெல்லாம் செல்பி எடுக்கும் புள்ளிங்கோ காலம் இங்கே!!

இல்லத்தரசிகளின் சட்டசபையாயிருந்த வீட்டுமுன் இருக்கும் திண்ணை எங்கே?
வீடே மறைக்குமளவிற்கு கட்டப்பட்டிருக்கும் சுற்றுச்சுவர் இங்கே!!

காலாண்டு அரையாண்டு விடுமுறைக்கே உறவினர் வீட்டுக்கு செல்லும் ஆனந்தம் எங்கே?
ஆண்டுக்கணக்காய் உறவினர்களை நேரில் பார்க்காத நாம் இங்கே!!!

**–முத்துராமன் யுவதி**



# ஏக்கம்

வல்லரசு நாட்டில் நாங்கள்
வசிக்கிறோம் குடும்பத்துடன்

இது இறை சித்தம்,

இத்தேசத்தை கண்டுப்பிடித்த
கொலம்பசுக்கு நன்றி!

எங்கள் உள்ளத்தின் பூரிப்பிற்கும்,
சந்தோசத்திற்கும் எல்லையில்லை,

இந்திய எல்லை தாண்டி பிழைக்க
வந்துள்ளோம் உண்மையான
கடவுச்சீட்டில்;

இங்கு காசு கொடுத்தால்
அனைத்தும் கிடைக்கிறது!

அடைப்பட்ட புட்டிகளில்;

"சந்தோசத்தை தவிர"

காசு கிடைப்பதால் அடைப்பட்டுக்
கிடக்கிறோம் நாங்களும்தான்...

சந்தோசத்திற்காக!!!

கம்மங்களியும், கட்டுச்சோறும்,
துள்ளிய மீனும், கிள்ளிய கீரையும்,

கிராமத்து கிழவிகளின் தாலாட்டுப்
பாட்டும்...

கிடைக்காமல் நாங்களும்,
ஏங்கித்தானே நிற்கிறோம்?



**மெர்சி பிரியா இராபர்ட் ராஜகுமார்**



# கை சொல்லும் காதை

சுண்டு விரல் **படிப்பு** நான் கையில் உள்ள மிகச் சிறிய விரல்.
எவ்வளவு படித்தாலும் போதாது என்பதை குறிப்பிடுவேன்.

மோதிர விரல் **அறிவு** நான் கையில் உள்ள தரமான விரல்.
படிப்பிற்கு ஏற்றாற் போல் ஒரு அங்குலம் அறிவு உயரும் என்பதை உணர்த்துவேன்.

நடுவிரல் **ஒழுக்கம்** நான் கையில் உள்ள உயர்ந்த விரல்.
அறிவிற்கு ஏற்றாற்போல் நல்லொழுக்கம்
வளரும் என்பதை தெரியப்படுத்துவேன்.

ஆள் காட்டி விரல் **அன்பு** நான்
கையில் உள்ள அன்பான விரல்.
அடுத்தவர் அனைவரிடமும் அன்பு பாராட்ட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுவேன்.

கட்டை விரல் **அருள்** நான்
கையில் உள்ள திடமான விரல்.
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் அன்பும்
வெற்றியும் பகிர வேண்டும் என்பதை பறைசாற்றுவேன். இரு கைகள் இணைய பாலமாகவும் இருப்பேன்.



**கணபதி சுப்ரமணியன் நடராஜன்**

## காதை உணர்த்தும் செய்தி

திடமான கை முகப்பு எனும் ஆற்றல் கொண்டு
விசாலமான கைமத்தி எனும் அறிவை கொண்டு
மணியான விரல்களை கொண்டு பல செல்வங்களை ஈட்டி
அறம் செய விரும்பு !!!

இந்த சிந்தனையை உங்கள் காலை 'முதல் செய்தியாக'
வழக்கம் கொள்ள உங்களுக்கு
அறிவிப்பது இந்த அரும்பு ..



# உலகம் காத்திடும் இயற்கை வேளாண்மை



உலக உயிர்களின் பசி போக்க,
உயிர் காக்க உதவுவது உணவு
உணவு உற்பத்திக்கு தேவை விவசாயம்
மொத்தத்தில்
உலகம் இயங்குவது விவசாயத்தால் தான்

விவசாயம் எனும் பெயரில்
விஷசாயம் பூசிக் கொண்டு இருக்கிறோம்
தாய்ப்பாலில் கூட விஷம் என்றும் நிலைமை ஆகிவிட்டது
தாமதித்தால் தரணி தரைமட்டமாகிவிடும் ஏனெனில்
பாரம்பரிய முறைகளை கைவிட்டு
ரசாயன உரங்களையும், பூச்சிக்கொல்லிகளையும்,
களைக்கொல்லிகளையும்
நம் உடமையாக ஆக்கிக்கொண்டோம்
மானியம் கிடைக்கிறது
மகசூல் கூடுகிறது என்று - மொத்தத்தில்
மலடாக்கினோம் நாம் நமது பூமித்தாயை

மனிதன் நாகரிகம் அடைய வழிவகுத்தது விவசாயம்
மனிதன் விவசாயத்தால் நாகரிகம் அடைந்து விட்டான்
மறுபக்கம் இலவசமாக நீரழிவுநோய், புற்றுநோய்,
மலட்டுத்தன்மை, பிறப்பு ஊனம்
போன்ற நோய்களையும் பெற்றுக் கொண்டான்
காரணம் மண்ணில் கலந்துள்ள ரசாயன மற்றும்
பூச்சிக்கொல்லி இவற்றின் எச்சங்களால் ...

மாற்றம் ஒன்றே மாறாதது
மறுக்கமுடியாத உண்மை
மலடாகிய மண்ணை நல்ல மகசூல் கிடைக்கும்
மண்ணாக மாற்றிட செய்ய வேண்டியவை -பயிர் சுழற்சி முறை,
கலப்பு பயிரிடுதல், உயிர் பூச்சிக்கொல்லிகள்,
ஒற்றை நாற்று நடுதல், மூடாக்கு போடுதல் போன்றவை

டிராக்டர் நன்றாக உழும் ஆனால் சாணி போடாது
என்று விளையாட்டாக கூறிய
"வானகம்" எனும் பயிற்சிப் பட்டறையை வித்திட்ட
வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் வழியில்
இயற்கை வேளாண்மை செய்வோம்
இயற்கை அன்னையை காப்போம்
நம்மாழ்வார் நம்மோடு இல்லாவிட்டாலும்
பூமிக்குள் பாரம்பரிய விதையாக உள்ளார்
பருவத்தே பயிர் செய்திடுவோம்
இந்த உலகம் காத்திட
இயற்கை வேளாண்மையுடன்...



ராஜகோபால் கருப்புசாமி





# ஒவ்வொரு நாளும் மகளிர் தினம்

இராபர்ட் அருண் ஜேம்ஸ்



உலகில் காணும்
முகத்துக்கெல்லாம்
முதல் முகவரி அளிக்கும்
அம்மா என்கிற பெண்மணி!

தாயாய் தந்தையாய்
இரண்டாய்க் கலந்து
இரட்சித்துக் காக்கும்
அக்கா என்கிற பெண்மணி!

சண்டை பல செய்தாலும்
விட்டுமட்டும் கொடுக்காத
வினோதக்காரி இந்தத்
தங்கை என்ற பெண்மணி!

இரத்தமாய் சதையாய்
தலைமுறை தாங்கும்
தனிசக்தி கொண்டவள்
மகள் என்கிற பெண்மணி!

உலகின் பாசத்தை
மொத்தமாய்க் கூட்டி
முத்தமாய்க் கொட்டும்
பாட்டி என்கிற பெண்மணி!

நரை கூடும் வேளையில்
பிஞ்சுக் கைகளால்
ஆசி முக்தி அளிக்கிற
பேத்தி என்கிற பெண்மணி!

பிறந்த வீடு மறந்து
புகுந்த வீடு புகுந்து
தகுந்த வாழ்வளிக்கும்
தாரம் என்ற பெண்மணி!

வேறு தாயின் வயிறென்றாலும்
வேறுபாடு ஏதுமின்றி
தோள் கொடுக்கத் துணிகின்ற
தோழி என்கிற பெண்மணி!

இப்படி
ஒவ்வொரு நாளும்
கொண்டாடப்பட வேண்டிய
உங்களை
வருடத்தின் ஏதோ
ஒரு நாளைக் குறித்துக்
கொண்டாடச் சொன்னது யாரோ?





# அம்மாச்சி வீடு

## எழிலரசி ஆறுமுகம்



சின்ன வயசில கோடை விடுமுறை வந்தாலே எப்போ அம்மாச்சி வீட்டுக்கு போவோம்னு மனசு ஏங்கி கிடக்கும். ஒவ்வொரு விடுமுறைக்கும் போற ஊருதானாலும் கோடையில் கூட கரை புரண்டு ஓடுற காவேரி , போற வழி எங்கேயும் ரெண்டு பக்கமும் பச்சை பசேர்னு வாழை தோப்பு,கரும்பு தோட்டம்,தோப்பு நடுவே இருக்கும் அம்மன் கோவில்னு இருக்கிற ஊர பாக்க யாருக்கு தான் மனசு ஏங்காது?!

விடியும் முன்னாடியே தெருவில் இருக்கிற எல்லாரும் சேர்ந்து காவேரில விளையாட போனா, வெயில் சுளீர்னு அடிக்கற வரைக்கும் யாரையும் கிளப்ப முடியாது. குளிச்சுட்டு வர வழில விக்கற நுங்கு, பதநி எல்லாம் வாங்கி சாப்பிடும்போது, இத விட சுவையான எதுவும் இந்த உலகத்திலேயே கிடையாதுனு தோணும். பகல் நேரங்களிலயும், வீட்டுக்கு பின்னாடி ஓடற வாய்க்கால் வரப்பில், கால் நனைய உக்கார்ந்து ஒரு வருச கதையையும் பேசி தீர்ப்போம். விடுமுறை முடிஞ்சு ஊருக்கு கிளம்பும் போது, இதெல்லாம் அனுபவிக்க இன்னும் ஒரு வருசம் காத்துக்கிடக்கணுமேனு மனசு கனத்துப் போகும். படிப்பு முடிஞ்சு வேலை, கல்யாணம்னு அம்மாச்சி வீடு போறது கொஞ்ச கொஞ்சமா குறைஞ்சு, முழுசா நின்னு போச்சு.

இந்த தடவை இந்தியா போனப்போ, நான் சின்ன வயசுல விளையாடின காவேரி ஆத்தையும் , வாய்க்காலையும் என் பையனுக்கும் காட்டி பழைய கதை எல்லாம் சொல்லணும்னு கூட்டிட்டு போன எனக்கு தான் எவ்ளோ பெரிய ஏமாற்றம்! கரை புரண்டு தண்ணி ஓடின காவேரில இப்போ மண்ணை கூட காணோம்! கரும்பு தோட்டமும், வாழை தோப்பும் டெர்ரஸ் வீடுகளா மாறியிருக்க, நடுவுல இருந்த அம்மன் கோவில் மட்டும் பரிதாபமா பாழடைஞ்சு இருந்தது. காவேரி ஆத்துக்கே இந்த கதினா வாய்க்கால் நிலைமை அதை விட பரிதாபம். சாய பட்டறையில் இருந்து வரும் கழிவு நீரோட பிளாஸ்டிக் குப்பைகள் கூட்டணி சேர்ந்து வாய்க்கால் இருந்த இடம் தெரியாம சாக்கடையா , கொசுக்களின் குடியிருப்பா உருமாறி இருந்துச்சு.

என் அம்மா சின்ன வயசுல தான் விளையாடின ஆத்தையும் , வயலையும் எனக்கு பெருமையா காமிச்ச மாதிரி என்னால என் பையனுக்கு காமிக்க முடியலன்னு மனசு பூரா குற்ற உணர்வும், கண்ணுல கண்ணீரும் நிரம்பி நான் சத்தமில்லாம அழும்போது எங்கயோ தூரத்துல தொலைக்காட்சி, “ கயல் விளையாடும் வயல்வெளி தேடி காய்ந்து கழிந்தன கண்கள் ...

காவேரி மலரின் கடிமனம் தேடி கருகி முடிந்தது நாசி ...” னு சத்தமா பாடிட்டிருந்தது.

# ஆதலால் நட்பு கொள்வீர்!

## ஜூலியா ஃபிரான்சிஸ்



கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில், "மனிதன் ஒரு சமூக விலங்கு", என்றும், பெரும்பாலும் மனிதர்களுக்கிடையேயான நட்பு ஒருவருக்கொருவரிடம் உதவியோ, பலனையோ எதிர்பார்த்து ஏற்படும் இணைப்பு என்றும் கூறுகிறார். மேன்மையான நட்பு அரிது; அது மேன்மையான குணம் பொருந்திய மனிதர்களுக்கிடையே மட்டுமே காணப்படும் என்றும் கூறுகிறார். எது உண்மையான நட்பு? மேன்மையான குணம் பொருந்திய நண்பன் எப்படி இருக்க வேண்டும்? இந்தக் கேள்விகளுக்கான விடையை எங்கே தேடுவது?

சங்கத் தமிழன், தமிழனுக்காக மட்டுமல்ல, உலகுக்கே விட்டுச் சென்ற தமிழ் சங்க இலக்கியங்களில் உள்ளன இவற்றிற்கான, உவமைகளோடு கூடிய முத்து முத்தான விடைகள். ஆம், அள்ள அள்ளக் குறையாத செல்வத்தை உள்ளடக்கிய அறிவுக் கிடங்கன்றோ சங்க இலக்கியங்கள்! "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி", என்று போற்றப்படும் நாலடியாரும் திருக்குறளும் நட்பின் மேன்மையை எழிற்றமிழில் கூறுகின்றனவே!

யானையானது மிகுந்த பலமும் கம்பீரமும் பொருந்தியதாக இருந்தாலும், பலநாள் பழகிய, தன்னை வளர்த்த பாகனையே, குற்றங்கண்டு கொல்லும். ஆனால் நாயோ, வளர்த்தவன் தன் மீது சினம் கொண்டாலும், அன்போடு அவனிடம் வாலாட்டி நிற்கும். நல்ல நண்பன் நாயை ஒத்த இயல்புடையவன். அப்பேற்பட்ட நண்பன், தன் கையினால் அரிசி கழுவிய நீரில் சமைத்த கீரையைத் தந்தால் கூட அது அமிழ்தமாகிறது. ஆனால் சிறப்பாகத் தாளித்துண்டாக்கிய, கறிகளோடு கூடிய வெண்ணிறமான நெல்லரிசியுணவை, அன்பு பொருந்தாதவர் கையினால் உண்டால் எட்டிக் காய்போல் வெறுப்பைத் தரும் என்கிறது நாலடியார்.

ஒருவன் உடுத்தி இருக்கும் உடை விலகும்பொழுது அவனுடைய கைகள் தன்னிச்சையாக அவன் மானம் காக்கும், தன் நண்பனின் தேவைகள் இன்னதென்று யாரும் கூறாமலே குறிப்பால் உணர்ந்து உதவுபவனே உண்மையான நண்பன் என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. நண்பர்கள் அருகருகே இருப்பதும், நெருங்கிப் பழகுவதும் அவசியமானது இல்லை, மாறாக ஒத்த எண்ண ஓட்டங்களே நண்பர்களை இணைக்கும் என்றும் கூறுகிறார். வள்ளுவன் கூறும் இவ்வளவு அழகான, அற்புதமான நட்பு சாத்தியமா? சாத்தியம் என்கிறது வரலாறு.

சங்க இலக்கியப் பாடல்களில், கோப்பெருஞ்சோழன் என்ற ஒரு சோழ மன்னன் இருந்ததாகவும், அவனுக்குப் பல தமிழ்ப் புலவர்கள் நண்பர்களாக யிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுள் மிக நெருக்கமானவர்கள் புல்லாற்றூர் எயிற்றியனார் மற்றும் பாண்டிய நாட்டுப் புலவர் பிசிராந்தையார். கோப்பெருஞ்சோழன் தன் மகன்களுடன் ஏற்பட்ட பகையினால் அவர்களுடன் போரிட முற்பட்டபோது, புல்லாற்றூர் எயிற்றியனார் அவனைத் தடுத்து அறிவுரை கூறியதால், போர் எண்ணத்தைக் கைவிட்டு வடக்கிருந்து உயிர் விட முடிவெடுத்தான். தன்னை ஒரு முறை கூட கண்டிராத நண்பர் பிசிராந்தையார் இச்செய்தியறிந்து கண்டிப்பாக வருவார் என்று, தன்னருகே பிசிராந்தையாருக்கு இடம் ஒதுக்கச் சொன்னான். பலரும் வியக்கும் வண்ணம், மன்னர் நம்பியது போலவே பிசிராந்தையாரும் வந்தார். கோப்பெருஞ்சோழனைத் தழுவி தேற்றி, அவன் புகழ் பாடி, ஐம்புலனடக்கி, உண்ணா நோன்பிருந்து அவனோடு வடக்கிருந்தார்.

நட்பின் மாண்பினை சங்க காலத் தமிழர்கள் எழுதிவிட்டு மட்டும் செல்லவில்லை வாழ்ந்தும் காட்டியுள்ளனர். நாமும் பலன் எதிர்பார்த்து மேலோட்டமான நட்பு பாராட்டாமல், "முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பது நட்பு", என்ற குறளுக்குச் சான்றாக உண்மையான நட்பு கொள்வோம்; தமிழ்த்தாய் நம்மை வழி நடத்தட்டும். நன்றி!




# நன்றி! நன்றி! நன்றி!

இராபர்ட் அருண் ஜேம்ஸ்



வந்தனம் பெரியோரே!
வந்தனம் பெற்றோரே!
வந்தனம் சான்றோரே!
வந்தனம் ஆன்றோரே!

வந்தனம் மாணவரே!
வருங்கால மன்னவரே!
வந்தனம் பிள்ளைகளே!
வருங்கால முல்லைகளே!

எல்லோரும் சேர்ந்து நல்
நிகழ்ச்சிக்கு வந்தீர்கள்!
ஒத்துழைப்பு அதை நல்கி
ஆதரவைத் தந்தீர்கள்!

இன்முகத்துடன் வந்திங்கு
வரவேற்பை ஏற்றீர்கள்!
நிகழ்வுகள் பல கண்டு
நல்லின்பம் பெற்றீர்கள்!

குடும்பமாய் அமர்ந்திங்கு
உணவு பெற்று உண்டீர்கள்!
நல்லிணக்கம் என்பதைக்
கண்ணாரக் கண்டீர்கள்!

திறமைக்கு மறவாமல்
கைதட்டி மகிழ்ந்தீர்கள்!
மாணவர் மகிழும் வண்ணம்
மனதாரப் புகழ்ந்தீர்கள்!

பள்ளிப் பறவைகளைத் தாம்
பறக்கத் தான் வைத்தீர்கள்!
நிகழ்வை வெற்றியாக்கி
வரலாற்றில் தைத்தீர்கள்!

உங்களைப்போல் யாருண்டு
என சொல்ல வைத்தீர்கள்!
காரணம் கேட்டபோது
தமிழர் என்று சொன்னீர்கள்!

அன்பர்களே! நண்பர்களே!

என்றும் வேண்டும் எமக்குத்
தங்களின் அமோக ஆதரவு!
இது தமிழ்ப் பள்ளி போடுகின்ற
அன்பில் கலந்த உத்தரவு!





ஜோசப்
செல்வராஜ்

# பொங்கல் விழாக் கொண்டாட்டம்




• Dev Vidyuuth
• Eyalini
• Feroniya
• Levin
• Navya
• Rakshini
• Rishika
• Shahana
• Varshita



Missouri Arts Council
The State of the Arts










Tamil Sangam of Missouri






வில்லுப்பாட்டு
கீழடி
























நன்றி
வணக்கம்











# தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள்



மழலை
சிந்துஜா
கோவிந்தராஜன்



மழலை
சுமதி விஜய்



மழலை
சுஜாதா செந்தில்குமார்



மழலை
ராமலஷ்மி ஆனந்த்



மழலை
வினோதா
பிருத்திவிராஜ்



மழலை
ஈஸ்வரி
சங்கரசுப்ரமணியன்



மழலை
கோமதி ராஜா



மழலை
விஜிலா சுதாகர்



மழலை
ஸ்ரீநிதி ஜெகன்நாதன்



நிலை 1
வினோதா ராஜா



நிலை 1
ஆனந்தி வெங்கட்



நிலை 1
உமா மகேஸ்வரி பிரதீப்



நிலை 1
எழிலரசி
கோகுலகிருஷ்ணன்



நிலை 1
சாந்தி ஜெயபிரகாஷ்



நிலை 1
திவ்யா பாலா



நிலை 1
நவஜோதி நவச்சிவாயம்



நிலை 1
ராஜேஸ்வரி விக்ரமன்



நிலை 2
அனிதா விஜயகுமார்



நிலை 2
ஆதிசரண் ஸ்ரீதர்



நிலை 2
சசிகலா கருப்புச்சாமி



நிலை 2
சாந்தகுமாரி
சிவராஜன்



நிலை 2
சிவராஜன் ஐயப்பன்



நிலை 2
தீபா ரகுராமன்



நிலை 2
மிர்ரா ராமகிருஷ்ணன்



நிலை 2
ரம்யா சங்கர்



நிலை 2
ஆனந்தி ஜெயராமன்



நிலை 2
ரேணுகா தேவி
ராஜேந்திர பாபு



நிலை 2
வைஷ்ணவி ஜனார்த்தனன்



நிலை 3
கலா ராமலிங்கம்



நிலை 3
கலைவாணி நிரஞ்சன்குமார்



நிலை 3
கோகிலா தர்மராஜன்



நிலை 3
சக்திவேல்
ஜெகதீசன்



நிலை 3
சிக்கல் குமார்
நாகராஜன்



நிலை 3
செந்தில் நாயகி
சுப்ரமணியன்



நிலை 3
தாரணி சிவராம்



நிலை 3
நித்யா
விஜயகுமார்



நிலை 3
ஸ்ரீமதி
அருண்குமார்



நிலை 3
பிரியா ஞானசிவம்



நிலை 3
புவனேஷ்வரி
ராஜேந்திரன்



நிலை 3
சோபனா தேவி
பாலசுப்பிரமணி



நிலை 4
அருணா குமார்



நிலை 4
அனுராதா குமார்



நிலை 4
ஆஷா ஜேசு



நிலை 4
எழிலரசி ஆறுமுகம்



நிலை 4
சியாமளா சுப்பிரமணி



நிலை 4
சுபாராஜேஸ்வரி
ஜெய்கணேஷ்



நிலை 4
மீரா ஜெயபால்



நிலை 4
மீனாட்சி
ராமகார்த்திகேயன்



நிலை 4
ரம்யா ஜானகிராம்



நிலை 4
ஜோதிலிங்கம்
சிவபாக்கியம்



நிலை 4
சரண்யா தேவி
கண்ணன்



நிலை 5
அபிராமி சுரேஷ்குமார்



நிலை 5
பாரதி ராஜீ



நிலை 5
ஜெயந்தி வெங்கடா



நிலை 5
காயத்திரி
கிருஷ்ணமூர்த்தி



நிலை 5
சங்கரநாராயணன்
ராமசந்திரன்



நிலை 7
இராபர்ட் அருண்
ஜேம்ஸ்



நிலை 7
கீதா சிவசங்கர்



நிலை 7
ராஜலஷ்மி ரமேஷ் பாபு



நிலை 7
ஸ்ரீகாயத்ரி
சுரேஷ்குமார்



நிலை 8
இளங்கோவன்
தங்கவேலு



நிலை 8
மஞ்சு அருண்

# தன்னார்வலர்கள்



கமலக்கண்ணன்
சிவசங்கரன்



கவிதா
தாமல்



கார்த்திகேயன்
ரத்தினம்



கோகிலா
திருஞானம்



சரவணன்
பழனிவேல்



சுனிதா
ஜோதிலிங்கம்



டில்லிபாபு
ஆறுமுகநாயக்கர்
கணேசன்



தர்மராஜன்
ராமசாமி



நியதிகா
விக்ரமன்



பிரணவ்
பழனியப்பன்



பிரபாகர்
நடராஜன்



பூபதி சாமிகண்ணு



யசோதா இளங்கோ



ராம்கி சோமசுந்தரம்



ராஜகோபால்
கருப்புசாமி



அனன்யா
செந்தில்நாதன்



ஷ்ரேயாஸ்
சக்திவேல்

மணிகண்டன் பழனிச்சாமி
மஞ்சுநாதன் வெங்கட்டராமன்
தீபா பார்த்தசாரதி
பிருத்திவிராஜ் சிவராஜ்
சுந்தரி டேனியல்ஸ்

# செயற்குழு நிர்வாகிகள்



தலைவர்
செந்தில்
இராதாகிருட்டிணன்



முதல்வர்
(பால்வின் கிளை)
பிரியா ஸ்ரீதர்



முதல்வர்
(ஓபாலன் கிளை)
சிவசங்கர்
சங்கரநாராயணன்



துணை முதல்வர்
(பால்வின் கிளை)
நாராயணன்



துணை முதல்வர்
(பால்வின் கிளை)
ஜோதிலிங்கம்
சிவபாக்கியம்



துணை முதல்வர்
(ஓபாலன் கிளை)
பிரியா ஞானசிவம்



துணை முதல்வர்
(ஓபாலன் கிளை)
நவஜோதி நவசிவாயம்



செயலாளர்
தனபால்
இராதாகிருஷ்ணன்



இணை செயலாளர்
ராஜா கிருஷ்ணசாமி



பொருளாலர்
நந்தகுமார் ஹரிதாஸ்



தகவல் தொழில்நுட்ப
ஒருங்கிணைப்பாளர்
ரம்யா ஜானகிராம்



இணைய
ஒருங்கிணைப்பாளர்
சரண்யா தேவி
கண்ணன்



வளர்ச்சிப்பணி
இயக்குனர் இளங்கோ
திருப்பதி

# தமிழ்ப்பள்ளி இயக்குனர் குழு



இளங்கோ திருப்பதி



இளங்கோவன் தங்கவேலு



கனிக்கண்ணன் நாராயணசாமி



சிவசங்கர் சங்கரநாராயணன்



செந்தில் இராதாகிருட்டிணன்



பகவன்தாஸ் பலராமன்



பாரதி ராஜீ



பிரியா ஸ்ரீதர்



பொற்செழியன் ராமசாமி



ராஜா கிருஷ்ணசாமி

மிசௌரி தமிழ்ப் பள்ளி

நமது தமிழ் மொழி விலைமதிக்க முடியாத பாரம்பரிய சொத்து.
நமது பண்பாட்டின் அடையாளம். யார் என்பதற்கான முகவரி!
அதை உங்கள் குழந்தைக்கு வழங்கவேண்டுமெனில் தமிழ்மொழி
கற்றுக்கொடுங்கள். அமெரிக்காவில் மட்டும் 3000க்கும் மேற்பட்ட
குழந்தைகள் தமிழ் கற்கிறார்கள். அதேபோல் தமிழறிந்த
அமெரிக்கத் தமிழராய் உங்கள் குழந்தையும் இருக்க வேண்டுமா?

# 20 ஆண்டுகளாக செயின்ட் லூயிசில் நூற்றுக்கணக்கான தமிழ் மாணவர்களை உருவாக்கியுள்ள

# மிசௌரி தமிழ்ப்பள்ளியில் சேருங்கள்




**Locations**
**Ballwin Branch**
HINDU TEMPLE CULTURAL AND EDUCATION CENTER.
725 Weidman Rd, Ballwin, MO 63011

**OFallon Branch**
**Spencer Road branch library**
427, Spencer Road,
St. Peters, MO - 63376

- தமிழ் இணைய பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது.
- AdvancED அங்கீகாரம் பெற்றது.
- அமெரிக்கத் தமிழ் கல்விக் கழகம் (ATA) சார்ந்த பாடப் புத்தகங்கள் பல்கலைக்கழகத் தேர்வு, சான்றிதழ்!
- ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட 8 வருட பாடத்திட்டம்.
- இங்கு பயின்றால் பல்கலைக்கழகங்களில் இரண்டாவது மொழியாக தமிழ் கற்பது எளிது.

*For your kids to learn Tamil in Saint Louis, enroll them in Tamil School.*

- 8 year structured syllabus.
- Eligible for High School Foreign Language credits.
- Recognized by Tamil Virtual University and American Tamil Academy
- Exams and Certificates from TVU and ATA.
- If you would like to volunteer in Tamil school this is a nice opportunity.

**Contacts:**
http://school.motamilsangam.org/ and text to school@school.motamilsangam.org
**Sivashankar (314) 495 8817 (O'Fallon) Senthil (636) 487 4221**

# THINKING ABOUT BUYING A HOME?

## Get the right mortgage for your needs.



Whether you're a first-time homebuyer, are investing in real estate, or are looking to upgrade your lifestyle with a luxury home purchase, I'll help you understand your options and will stand by your side from application to closing. We offer many programs that may benefit you!

**CONTACT MARK FOR MORE INFORMATION TODAY**



**Mark Mayfield**
Originating Branch Manager
314.328.9914
Mark.Mayfield@myccmortgage.com
NMLS292254

**CrossCountry Mortgage, Inc.**
Two CityPlace Dr.
2nd Fl. Office 201 & 287A
St. Louis, MO 63141
NMLS3029 NMLS1828204

CrossCountry
More than a Mortgage
KUBERA MORTGAGE GROUP

Illinois Residential Mortgage Licensee. All loans subject to underwriting approval.
Certain restrictions apply. Call for details. NMLS3029 (www.nmlsconsumeraccess.org).

EQUAL HOUSING OPPORTUNITY